நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்.10.08.2018

2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10.08.2018ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.சு.சௌந்தரராஜன்,பி.ஏ.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)**இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ‘‘ஜுன்2018 மற்றும் ஜுலை 2018ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**தீர்மான எண்:169 பதிவு செய்யப்பட்டது.**

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.3650/2017/சி1)**

**2)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ‘‘ஜுன் 2018 மற்றும் ஜுலை 2018ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**தீர்மான எண்:170 பதிவு செய்யப்பட்டது.**

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.3650/2017/சி1)**

**3)** போடிநாயக்கனூர் நகராட்சிக்கு பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப புதிய குடிநீர் திட்ட விரிவாக்கத்திற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம் சென்னை, அவர்களின் ரூ.76.15/– கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை ஏதேனும் ஒரு நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,000/–ஐ இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:171 அனுமதிக்கப்பட்டது.**
**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 4375/2017/இ1)**

**4)**போடிநாயக்கனூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்ட பணிகளுக்கு ரூ.**472.80** இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | எண்ணம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | மயானக்கரை சாலையில் உள்ள பழைய உரக்கிடங்கில் நுண்ணுயிர் உரக்கலவை கூடம் அமைத்தல் (யூனிட் – I) | 1 | 60.00 |
| 2. | அசோக்நகர் லேஅவுட்டில் நுண்ணுயிர் உரக்கலவை கூடம் அமைத்தல் (யூனிட் – II) | 1 | 60.00 |
| 3. | குலசேகரபாண்டியன் லேஅவுட்டில் நுண்ணுயிர் உரக்கலவை கூடம் அமைத்தல் (யூனிட் – III) | 1 | 60.00 |
| 4. | மயானக்கரை சாலையில் உள்ள பழைய உரக்கிடங்கில் நுண்ணுயிர் உரக்கலவை கூடம் அமைத்தல் (யூனிட் – IV) | 1 | 60.00 |
| 5. | நுண்ணுயிர் உரக்கலவை கூடத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல் | 4 | 32.00 |
| 6. | முதல் கட்ட சேகரப் பணிக்கு பேட்டரி வாகனம் வாங்குதல் | 20 | 36.00 |
| 7. | இரண்டாம் கட்ட சேகரப் பணிக்கு நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ வாகனம் வாங்குதல் | 3 | 16.80 |
| 7. | மயானக்கரை சாலையில் உள்ள பழைய உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் பிரித்தல் | 1 | 148.00 |
| **மொத்தம்** | | | **472.80** |

**தீர்மான எண்: 172 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 2216/2018/இ1)**

**5)** இந்நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டுகளில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூலம் குழந்தைகளுக்கும் மேலும் பொதுமக்களுக்கு வீடு வீடாக சென்று நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தேனி மாவட்டம் முழுவதும் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகம் இருப்பதாலும் நிலவேம்பு கசாயம் வழங்கும் முகாமினை தொடர்ந்து நடத்துவதற்கு நிலவேம்பு கசாயம் கையிருப்பு குறைவாக உள்ளதாலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி 500கிலோ நிலவேம்பு கசாயம் பவுடர் ஸ்ரீபாலாஜி மார்கெட்டிங், அய்யம்பாளையம் நிறுவனத்திடம் இருந்து வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூபாய்.9.90 இலட்சத்தினை 2018–2019ம் நிதியாண்டின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 173 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** பொது சுகாதார அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.
( ந.க.எண். 1987/2018/H2)

**6)**போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் பணியிடம் 146 போக அரசாணை எண். 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997ன்படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை 270 என்பதால் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணியினை செவ்வனே செய்தவற்கு தனியார் நிறுவனம் மூலம் 70 பணியாளர்களை பணிக்கு அமர்த்த துப்புரவு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மான எண்.31, நாள்.31.01.2015ல் ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்காணும் ஒப்புதலின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு கடித ந.க.எண்.6004/பி3/2015, நாள்.24.04.2015ல் உரிய அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி அனுமதியின் அடிப்படையில் அவர்லண்ட் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.100, நாள்.31.07.217ன்படி 01.04.2018 முதல் 31.07.2018 வரை பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணிக்காலம் 31.07.2018 உடன் முடிவடைய உள்ளதால் இந்நகராட்சி பொது சுகாதாரத்தின் அவசியம் கருதியும், மேற்படி நிறுவனம் பணியினை தொடர்ந்து செய்தவற்கு விருப்பம் தெரிவித்து 16..07.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாலும், ஆணையர் அவர்களின் 27.07.2018ம் தேதிய குறிப்பின்படி 01.08.2018 முதல் 31.10.2018 முடிய மூன்று மாத காலத்திற்கு, 2018–2019ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர், தேனி அவர்கள் நிர்ணயம் செய்த தினக்கூலி ஊதிய மதிப்பீடு அடிப்படையில் 70 துப்புரவு பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும், நகராட்சி பொறியாளர் அவர்கள் தயார் செய்த உத்தேச செலவினத் தொகையின் அடிப்படையில் தொகை ரூ.26.48 லட்சத்தினை 2018–2019ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 174 அனுமதிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அனுமதிக்கப்பட்ட மூன்றாண்டுக்காலம் முடிவடைந்த நிலையில், பொதுசுகாதாராப் பணிகளின் அவசியம் கருதி மூன்று மாதங்களுக்கு குத்தகையை நீட்டிப்பு செய்தமைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் பின்னேற்புப் பெறவும் தீர்மானிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** 1. இந்நகராட்சி பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், அவர்லண்ட் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்திற்கு 01.04.2018 முதல் 31.07.2018 வரையிலான காலத்திற்கு 70துப்புரவு பணியாளர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.100, நாள்.31.07.2017ல் அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.87.81 லட்சத்துடன், 01.08.2018 முதல் 31.10.2018 வரையிலான காலத்திற்கு இப்பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.26.48 லட்சத்தினையும் 2018—2019ம் ஆண்டுக்கான நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 3491/2018/எச்2 )**

**7)** போடிநாயக்கனூர் நகராட்சிஅலுவலக கட்டிடத்தில் உள்ள மின்தூக்கியை 01.08.2018 முதல் 31.07.2019 வரை வருடாந்திர பராமரிப்பு செய்ய ரூ.65,000/—ஐ செலவினம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானஎண்.142, நாள்.29.06.2018 அன்று அனுமதி அளித்ததன் பேரில் 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

| | |
|---|---|
| 1. | M/s GS LIFT, NAGARKOIL, KANYAKUMARI (DT) |
| 2. | M/s SMS ELEVATOR COMPANY,MADURAI. |

**தீர்மான எண்: 175 மெஸர்ஸ் எஸ். எம். எஸ் . எலிலேட்டர் கம்பெனி, மதுரை அவர்களது குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s SMS ELEVATOR COMPANY, MADURAI. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**(ந.க.எண். 2333 /2018/இ1 )**

**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**
**போடிநாயக்கனூர் நகராட்சி.**